**விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(அக்டோபர் 7-ம் தேதி முதல் அக்டோபர் 11-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (1.10.15- 5.10.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 24.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 30- 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 25 |
| வானம் (ஆக்டா) | 4- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 64- 81 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 65- 74 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2- 13 |
| காற்றின் திசை | 110- 360 |

**11.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>7.10.15 | நாள் 2<br>8.10.15 | நாள் 3<br>9.10.15 | நாள் 4<br>10.10.15 | நாள் 5<br>11.10.15 |
| மழை (மி.மீ.) | 1 | 0 | 0 | 0 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33 | 33 | 33 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 5 | 5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 65- 70 | 65- 70 | 65- 70 | 60- 65 | 60- 65 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 4/ தெற்கு | 4/ தெற்கு | 4/ தெற்கு | 4/ தெற்கு | 4/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| மானாவாரி பயிர்கள் சாகுபடி | நிலம் தயாரித்தல் | மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க ஆழச்சால் அகலப்பாத்திகள், பகுதிப்பாத்திகள் மற்றும் பார்கள் போன்ற முறைகளை பின்பற்றி நிலம் தயாரிக்கவும். ஆழச்சால் அகலப்பாத்தி அமைக்கும் கருவி, கரை அமைக்கும் கருவி மற்றும் பார் அமைக்கும் கருவி போன்றவற்றை பயன்படுத்தி குறைந்த அளவு நேரத்தில் அதிக பரப்பளவில் வேலைகளை செய்து முடிக்கமுடியும். |

| | | |
|---|---|---|
| | இரகங்களை தெரிவு செய்தல் | மானாவாரியில் சாகுபடி செய்வதற்கு பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில் KC 3, மற்றும் PA 255, மக்காச்சோளத்தில் CoH(M) 6, சோளத்தில் K 8 மற்றும் K 12, பாசிப்பயிரில் CO 6, சூரியகாந்தியில் CO 4, கம்பில் CO(Cu) 9, எள்ளில் TMV 3, கொத்தமல்லியில் CO 4, சென்னாவில் KKM 1 ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை. |
| சோளம், மக்காச்சோளம், பாசிப்பயறு, உளுந்து, பருத்தி | விதையளவு | மானாவாரியில் விதைப்பு செய்வதற்கு சோளத்திற்கு 15 கிலோ/ எக்டர், மக்காச்சோளத்திற்கு 20 கிலோ/ எக்டர், பாசிப்பயறு மற்றும் உளுந்துக்கு 20 கிலோ/ எக்டர் மற்றும் பருத்திக்கு 15 கிலோ/ எக்டர் என்ற அளவில் விதைகளை பயன்படுத்தவும். |
| சோளம், மக்காச்சோளம் | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் விதைப்பு செய்யப்படும் விதைகளின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| சோளம் | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| சோளம், மக்காச்சோளம், பருத்தி | உயிர்உர விதைநேர்த்தி | மானாவாரி பயிர்களில் உரத்தேவையை குறைக்கும் விதத்தில் உயிர் உரங்களை பயன்படுத்தவும். 3 பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட்டுகள் பாஸ்போபாக்டீரியா அல்லது 6 பாக்கெட்டுகள் அசோபாஸ் உடன் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைக்கவும். விதை கடினப்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி விதைநேர்த்தி ஆகியவற்றை முடித்தபிறகு இறுதியாக உயிர் உர விதைநேர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சோளம் | விதைத்தல் | கடினப்படுத்தப்பட்ட சோள விதைகளை விதை மற்றும் உரம் விதைக்கும் கருவியைக்கொண்டு சீராக 3- 5 செ.மீ. ஆழத்தில் விதைக்கவும். 40:20:0 கிலோ/ எக்டர் என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும். உரம் விதைக்கப்பட்ட அதே வரிசையில் விதைகளை விதைத்து மண்ணால் மூடவும். விதைகளை 15 செ.மீ. இடைவெளிவிட்டு 60 செ.மீ. இடைவெளியில் அமைந்த இரட்டை வரிசைகளில் விதைக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை: அக்டோபர் 7& 11: 1& 3 மி.மீ. மானாவாரி பயிர்கள்- விதையளவு (1 எக்டருக்கு)- சோளம் 15 கிலோ, மக்காச்சோளம் 20 கிலோ, பாசிப்பயறு& உளுந்து 20 கிலோ& பருத்தி 15 கிலோ.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி